www.freetnbooks.com

**A**

# அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2025

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

## பொதுத்தமிழ்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்:90

பகுதி – I

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

I பலவுள் தெரிக: 14x1=14

1. மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்
இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

2. பொருத்தமான இலக்கிய வடிவம் எது ?
அ) ஏதிலிக்குருவிகள் – மரபுக் கவிதை ஆ) யானை டாக்டர் – குறும் புதினம்
இ) திருமலை முருகன் பள்ளு – சிறுகதை ஈ) ஐங்குறு நூறு – புதுக் கவிதை

3. கூற்று – "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.
விளக்கம் – கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
அ) கூற்று சரி, விளக்கம் தவறு ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி
இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

4. "இனிதென" – இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.
அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.
ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.
இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே, தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.
ஈ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

5. ஒட்டுப் போடாத
ஆகாயம் போல – இந்த
உலகமும் ஒன்றேதான்... இக்கவிதையில் பயின்று வருவது
அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

6. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
அ) 9 ஆ) 27 இ) 3 ஈ) 13

7. நிழல்போலத் தொடர்ந்தான் – இது எவ்வகை உவமை ?
அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) உரு

8. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று
அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

9. பூஜை, விஷயம், உபயோகம் – என்பவை முறையே __________ என்று தமிழில் வழங்கப்படும்.
அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி
இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி ஈ) வழிபாடு, பயன்பாடு, செய்தி

10. தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தின் மதிப்புறு முனைவர் பட்டம் பெற்றவர்
அ) பிரித்திகா யாஷினி ஆ) ஜோயிதா மோண்டல்
இ) தாரிகா பானு ஈ) நர்த்தகி நடராஜ்

11. இவர் பெயரால் திருநெல்வேலியில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவியுள்ளது.
அ) பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆ) பாரதியார் பல்கலைக்கழகம்
இ) மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஈ) அன்னை தெரேசா பல்கலைக்கழகம்

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



12. 1971 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்

அ) ரவிவர்மா ஆ) வால்ட் விட்மன்

இ) பாப்லோ நெருடா ஈ) ஸ்டெஃபான் மல்லார்மே

13. தமிழின் முதல் பாவடிவ நாடகநூல்

அ) இரகசிய வழி ஆ) மனோன்மணீயம்

இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

14. 'துஞ்சல்' – இலக்கண குறிப்பு தருக.

அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆ) தொழிற்பெயர்

இ) வினையாலணையும் பெயர் ஈ) உருவகம்

## பகுதி – II

### பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3x2=6**

15. என் அம்மை, ஒற்றியெடுத்த
நெற்றிமண் அழகே!
வழிவழி நினதடி தொழுதவர்,
உழுதவர், விதைத்தவர்,
வியர்த்தவர்க்கெல்லாம்
நிறைமணி தந்தவளே!

– இக்கவிதை அடிகளிலுள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.

16. ஏதிலியாப்க் குருவிகள் எங்கோ போயின – தொடரின் பொருள் யாது?

17. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

18. 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2x2=4**

19. நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

20. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்வி முறை குறித்துக் குறிப்பு வரைக.

21. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளுள் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

### பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7x2=14**

22. **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.**

அ) பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி

ஆ) கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்.

23. **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) பிரிந்தோர் (அல்லது) ஆ) ஏகுமின்

24. **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) அருவினை (அல்லது) ஆ) காலத்தச்சன்

25. **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

உலை, உளை, உழை

26. **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

குமரனை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள், என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



27. கலவைத் தொடராக மாற்றுக.
(மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை. மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர்)

28. நிறுத்தற் குறியிடுக.
பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர் என்றும் கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தமது 16ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.

29. கோடிட்ட இடங்களை நிரப்புக.
வில்லேர் __________ பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் __________ பகை.

30. உவமை, உருவகம் – வேறுபடுத்துக.

## பகுதி – III

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2x4=8

31. தமிழகப் பெண்கள் பாடிக் கொண்டே விளையாடும் போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?
32. "சலச வாவியில் செங்கயல் பாயும்" – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
33. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?
34. "உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்" – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2x4=8

35. தமிழ் நெடுங்கணக்கு வரிசையில் இனவெழுத்துகளின் பங்கைக் குறிப்பிடுக.
36. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் – குறிப்பு வரைக.
37. கலைச்சொல்லாக்கத்திற்கும் அகராதிக்கும் உள்ள வேறுபாடு யாது?
38. ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளன – ஏன்?

### பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3x4=12

39. பிறிதுமொழிதல் அணியைச் சான்றுடன் விளக்குக.

*(அல்லது)*

உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

40. மெய்ப்புத்திருத்துநர் பணிவேண்டி நாளிதழ் முதன்மை ஆசிரியருக்குத் தன் விவரக்குறிப்பு ஒன்று எழுதுக.

41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.
அ) தன்கையே தனக்குதவி

*(அல்லது)*

ஆ) யானைக்கும் அடிசறுக்கும்.

42. இலக்கிய நயம் பாராட்டுக.
(மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை விளக்குக.)

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
    பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல
    மாதர் அறிவைக் கெடுத்தார்.

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்தி
காட்சி கெடுத்திட லாமோ ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதமை யற்றிடும் காணீர்.

– பாரதியார்

43. அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடைகளைக் கண்டறிக.
அ) அறிவைத் தேடிப் போகுமிடம், உலகம் அறிய உதவுமிடம் (அகம்) ________
ஆ) வந்தால் மகிழ்ச்சி இது; உழைத்தால் கிடைக்கும் இது. (மானம்) ________
இ) வேடம் போட்டவன் வேடதாரி; பட்டம் வாங்கினவன் (தாரி) ________
ஈ) அளந்து அளந்து கொட்டிடுவான்; அகம் மகிழத் தந்திடுவான் (ஆள்) ________

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3x6=18

44. அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி விளக்குக.

45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) "சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே" என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக.

46. அ) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ. முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது ?

*(அல்லது)*

ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல் வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.

## பகுதி – V

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4+2=6

அ) உண்டாலம்ம... எனத் தொடங்கும் புறநானூறு பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) "செயின்" என முடியும் குறள்

***/***

www.freetnbooks.com | FREETNBOOKS